செய்தித் தாளாகப் பதிவு பெற்றது: வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலனசபை வெளியீடு. பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்: விரோதி ஞூ (1889) ஆவணி மீ 28 உ, அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அக] யாழ்ப்பாணம்:- சௌமிய ஞூ மாசிமீ உ௩ உ வெள்ளிக்கிழமை (௬-3-1970) [இல-௬௮

இந்து சமயப் பாடத் திட்டத்தில்

# சைவ-சித்தாந்தப் பகுதியைப் புறக்கணிக்கலாமா

## சைவ பரிபாலன சபை ஏகமனதாக ஆட்சேபம்

தேவாரம், திருவாசகம், பெரியபுராணம், திருவருட்பயன் விளக்கவுரை முதலிய சைவசித்தாந்தப் பகுதிகளை எதிர்கால உயர்தர வகுப்பு இந்து சமயப் பாடத்திட்டத்திலிருந்து நீக்கப்பட்டமையை ஆட்சேபித்து எதிர்ப்புத் தெரிவித்து கல்வியமைச்சருக்கு யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபைக் காரியதரிசி ஒரு தந்தியை அனுப்பி வைத்துள்ளனர்.

28-2-70 சனிக்கிழமை சபைத் தலைவர் சித்தாந்த வித்தகர் திரு வே. நாகலிங்கம் J.P.U.M. அவர்கள் தலைமையில் சபை நாவலர்மண்டபத்தில் நடைபெற்ற சபை நிருவாக சபைக் கூட்டத்தில் இத் தீர்மானம் நிறைவேற்றியது.

புதிதாக வெளியிடப்பட்ட பாடத் திட்டத்தை நீக்கிப் பழைய பாடத் திட்டத்தை நடைமுறையில் வைத்திருக்க வேண்டுமென்றும குறித்த தீர்மானத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

முதலியார் செ. முத்துத்தம்பி, முன்னாள் கல்வியதிகாரி திரு சிவ. உ. சோமசேகரம் திரு. வ. கார்த்திகேசு, வித்துவான். க. கி. நடராஜன் திரு. வை. இரகுநாதமுதலியார் முகாந்திரம் இ பொ. இராசையா முதலியோர் ஷ தீர்மானத்தை ஆதரித்துப் பேசினார்கள்.

யாழ்ப்பாணம் பா உ. திரு. ஜீ ஜீ பொன்னம்பலம் உடுப்பிட்டி பா உ திரு. மு சிவசிதம்பரம் கிளிநொச்சி பா உ திரு, கா. பொ. இரத்தினம் முதலியவர்களுக்கும் தந்திகள் அனுப்பப்பட்டன. இது சம்பந்தமான நடவடிக்கைகளைக் கையாள சபைத்தலைவர் திரு. வே. நாகலிங்கம் வித்துவான் க. கணபதிப்பிள்ளை, வித்துவான் க. கி. நடராஜன் ஆகியவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட ஒரு உபசபையும் நிறுவப்பட்டது.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

செத்துச் செத்துப்
பிறப்பதே தேவென்று
பத்தி செய்மனப்
பாறைகட் கேறுமோ
அத்த னென்றரி
யோடு பிரமனும்
துத்தி யஞ்செய
நின்றநற் சோதியே

திருச்சிற்றம்பலம்
-திருநாவுக்கரசசுவாமிகள்

சுதுமலைச்

### சிவன் கோவில்

சுதுமலை, ஸ்ரீவிசாலாட்சியம்பாள் சமேத விசுவநாதப் பெருமான் ஆலயத்தில் மாசி மீ 29-ம் திகதி (12-3-70) வியாழக்கிழமை துவஜாரோகணமும், பங்குனி மீ 8-ம் உ (21-3-70) சனிக்கிழமை இரதோற்சவமும, 9-ம உ (22-3-70) ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

### பரீட்சை முடிவுகள்

வண்ணை, சந்தையர்மடம் கற்பகபக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகத்தினர் அணிமையில் நடாத்திய சைவசமய அறிவுப் போட்டி முடிவுகள் வெளிவந்துள்ளன.

### பலாலி ஆசிரிய கலாசாலையில்

பலாலி, அரசினர் ஆசிரிய கலாசாலை மாணவர் மன்றத்தினரால் கலாசாலை மண்டபத்தில் மகாசிவராத்திரி விழா இனிது கொண்டாடப்படும், சொற்பொழிவுகளும் இன்னிசைக் கச்சேரிகளும் இடம்பெறும்.

ஆட்சேபிக்கப்பட்ட

## இந்து சமயப் பாடத்திட்டம்

### பண்டிதர் அவர்களின் தந்திச் செய்தி

புதிய இந்துசமயப் பாடத்தை யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை ஆட்சேபித்து அனுப்பிய தந்திக்கு கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கள் வேண்டிய நடவடிக்கை எடுப்பதாக சபைக் காரியதரிசிக்குப் பதில் அனுப்பியுள்ளார்.

(3-ஆம் பக்கத்தின் வளர்ச்சி)

### சைவசித்தாந்தப் பகுதியுள்ள முந்திய பாடத்

சிவஸ்ரீ ச குமாரசுவாமிக் குருக்கள் (இ) திரு. சி. இலக்குமணன் [பக்கம் 340 — 422]

பகுதி III வைஷ்ணவ சித்தாந்தமும் பிறவும்

1. பரம், ஜீவன், ஜகத் இவற்றுக்கிடையிலுள்ள தொடர்பு விசேடங்கள்) [அ] அத்துவைதம், [ஆ] விசிஷ்டாத்துவைதம், [இ] துவைதம் 2. கர்மயோகம், பக்தியோகம் (பகவத்கீதை 3 ஆம், 12 ஆம் அத்தியாயங்கள்.) 3. சங்கரர், ராமானுஜர், மாதவர் — இவர்கள் வரலாறுகள், 4. பாடப் புத்தகங்கள்: [அ] பகவத் கீதை — 3 ஆம், 12 ஆம் அத்தியாயங்கள். [ஆ] இந்திய தத்துவஞானம் — பக்கம் 265 - 340

படிப்பதற்குரிய துணை நூல்கள்: இந்து சமயம் — ஒரு சிறு விளக்கம், — டாக்டர் ரி. எம். பி. மாதவன் அவர்கள், இந்து சமயம் — தத்துவ தரிசனங்களும் அதன் வரலாறும். கலைப்புலவர் க. நவரத்தினம் அவர்கள். இந்தியத் தத்துவங்கள்.

### சிவராத்திரி வழிபாடு

யாழ். இந்துக்கல்லூரியில்:

யாழ். இந்துக்கல்லூரி இந்து இளைஞர் கழக ஆதரவில், இன்று [6-3-70வெள்ளிக்கிழமை] மாலை 6 மணிதொடக்கம் சிவராத்திரி விழா நடைபெறத் திருவருள் கூட்டியுள்ளது. ஷ கல்லூரி ஞான வைரவர் கோவிலில் அபிஷேக ஆராதனையும், பிரார்த்தனை மண்டபத்தில் பூசை ஆராதனை கூட்டுப்பிரார்த்தனை ஆகியனவும் கல்லூரி அதிபர்அவர்களின் தலைமையில், பண்டிதர் மு. கந்தையா B. A, (மானிப்பாய் இந்துக்கல்லூரி முதலியவர்களின் விரிவுரைகளும், ஷ கல்லூரி மாணவர்களின் கதாப்பிரசங்கமும, மிருதங்க கச்சேரியும், வில்லுப்பாட்டு நிகழ்ச்சியும், சொற்பொழிவுகளும் இடம் பெறும்.

### நவீன பாலர் பள்ளி திறப்பு விழா

உடுப்பிட்டி வாழ் சின்னஞ்சிறு பாலர்களின் நலன்கருதி ஓர் நவீன பாலர் பள்ளி ஒன்றினைச் சென்ற மாசித திங்கள் 5-ம் நாள் (16-2-1970) திங்கட்கிழமை 9-45 மணிக்கு சைவத். திரு க. பத்மநாதன் தலைமையாசிரியர், அரசாங்க தமிழ்க்கலவன் பாடசாலை உடுப்பிட்டி) அவர்களால் விகாரவத்தை உடுப்பிட்டிவீதி உடுப்பிட்டி 51/1 ஆம் இலக்க இல்லத்தில் அர்ப்பணம் செய்து வைத்தார்கள்

உடுப்பிட்டி இந்துசன்மார்க்க சபையின் உபதலைவரும் சமயப் பெரியாருமாகிய சைவத் திரு. சு. இராசலிங்கம் அவர்கள் ஷ பாலர் பள்ளியின் அவசியத்தினைப் பற்றியும், வளர்ந்துவரும் சமூகத்தில் பாலர்களின் பங்கினையும் எடுத்து விளக்கினார். இந்த நற்பணிக்கு எல்லோருடைய ஒத்துழைப்பையும் ஒற்றுமையையும் வேண்டிக் கொண்டார். உடுப்பிட்டி வாழ் மக்கள் தங்கள் குழந்தைகளை அவசியம் இந்த நவீன பாலர் பள்ளியில் வந்து சேருமாறும் கேட்டுக் கொண்டார். சிற்றுண்டி வழங்கலுடன் திறப்பு விழா இனிது நிறைவேறிற்று.

### சங்கீதகதாப் பிரசங்கமும் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியும்

மகா சிவராத்திரி தினமாகிய (6-3-70) இன்று, "தமிழ்மணி" எஸ் கணேசசுந்தரம் அவர்கள் கைதடி, கோணலங்காடு வைரவர் கோவிலும், அரியாலை சித்தி விநாயகர் கோவிலிலும், வியாபாரிமூலைஇந்தில் விநாயகர் ஆலயத்திலும், கொழும்புத்துறை இலந்தைக்குளம் பிள்ளையார் கோவிலிலும், வேலக்கைப் பிள்ளையார்கோவிலிலும், நாராந்தனை கந்தசுவாமி கோவிலும் சங்கீதகதாப்பிரசங்கமும், வில்லுப்பாட்டு நிகழ்ச்சியும் மாலை 6-00 மணி முதல் அதிகாலை 5 மணி வரை தொடர்பாக ஆங்காங்கு உரிய நேரத்தில் நடாத்தவிருக்கின்றார்.

x x x

நீர்வேலியில்

நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் கோவிலில் இன்று மகா சிவ்ராத்திரி விழா கொண்டாடப்படுகின்றது. இரவு நிகழ்ச்சிகளில் பூசை, ஆராதனைகளுடன் தொடர்ந்து, வித்துவான் திரு க. சொக்கலிங்கம் ஆசிரியர் திருமதி வேதவல்லி கந்தையா, திரு எஸ் தாமோதரம்பிள்ளை ஆகியோர்களது சொற்பொழிவுகளும்; இன்னிசை விருந்துகளும் இடம்பெறும்.

### 42 வருடகாலம் ஆசிரிய சேவை

ஆசிரியர் திரு. க. சோமசுந்தரம் அவர்கள் 42 வருடகாலம் சிறந்த சேவை புரிந்து அண்மையில் ஓய்வுபெற்றனர். அவர் ஈழநாட்டிலும், மலாய நாட்டிலும் கல்வித் தொண்டு புரிந்தனர். கொக்குவில் நாமகள் வித்தியாசாலை, செங்குந்தாக் கல்லூரி, சேணியதெரு ஆங்கில வித்தியாசாலை முதலிய கல்விச்சாலைகளில் கல்வி கற்பித்த

(வளர்ச்சி 4-ஆம் பக்கம்)




பாவித்த வெற்றுறைகளைச் சேகரித்து
பரிசு பெறுங்கள்
மில்க்வைற்சோப்தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.

# சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சௌமிய ஞு மாசி மீ உ௩-உ வெள்ளிக்கிழமை [1970


## நாவலர் பெருமான் கட்டிக் காத்த சைவசமயத்தை அவமதிப்பதா?

கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்வகுப்புக்கான இந்துசமயப் பாடத் திட்டத்தில் கல்வி இலாகா சைவ சமய மரபுக்கு முரணான மாற்றங்களைச் செய்த மையைச் சைவ சமயப் பெரியார்களும், புலவர்களும் பெற்றார்களும் அறிந்து பெரும் கவலைப் படுகின்றனர் ஈழ நாட்டிலுள்ள தமிழர்கள் பெரும்பாலோர் சைவர்கள். அவர்கள் மதம் சைவம். சைவம் என்பது சிவசம்பந்தம். ஆன்மாவை சிவத்துடன் இரண்டறக் கலக்கும் மார்க்கத்தைப் போதிப்பதே சைவ சமயம். அச்சமயத்தின் முதல் நூல்கள் வேதமும் சிவாகமமும் அவற்றின் வழியாகத் தோன்றிய சைவத் தெய்வப் பன்னிரு திருமுறைகளும் சைவ சித்தாந்த சாத்திரம் பதினன்குமாகும். சைவ சமயிகள் இந் நூல்களையே கற்றல் வேண்டும். அவை விரிவாக விருக்கின்றமையினால் சைவ சமயப் பிள்ளைகள் தங்கள் சமயத்தை நன்கறியவும் சாதனை செய்யவும் நாவலர் பெருமான் முதலாம் சைவ வினவிடை, இரண்டாம் சைவ வினவிடை, பாலபாடங்கள், பெரிய புராண வசனம், திருவிளையாடற்புராண வசனம், சைவ சமய நெறி உரையுடன் வெளியிட்டுள்ளனர். சைவ சமயப்பிள்ளைகள் இந் நூல்களைக் கற்றால் பதி, பசு, பாச இலக்கணங்களை யறிவார்கள் சிவ பரம்பொருளை அர்ச்சித்துத் திருவடி சேரும் அருச்சத்தைக் கடைப்பிடிப்பார்கள்.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர வகுப்புகளினது இந்துசமயப் பாடத் திட்டத்தை முதல் முதல் வகுத்தவர் ஈழத்தில் பெரிய கல்விமானென மதிக்கப்பட்ட காலஞ்சென்ற சைவப் பெரியார் திரு சு. சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்கள். அவர் வகுத்த பாடத் திட்டத்தில் சைவ சித்தாந்தத்துக்கும் திருமுறைகளுக்கும் நாயன்மார் வரலாறுகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. அவருக்குப் பின் சைவ சமயஅறிவும் சைவ சமய அநுட்டானமுமில்லாதவர்கள் அவருடைய பாடத் திட்டத்தை நாளுக்கு நாள் மாற்றி அவருடைய கொள்கைகளைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டார்கள். இப்பொழுது நடைமுறையிலுள்ள கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்வகுப்புக்கான இந்துசமயப் பாடத்திலுள்ள சித்தாந்தப் பாகத்தை முழுதும் நீக்கிவிட்டமையே சைவமக்களுக்குப் பெரும் துன்பத்தைக் கொடுக்கின்றது. இனிமேல் நடைமுறைக்கு வரப்போகின்ற பாடத் திட்டத்தில் முந்திய பாடத்திலுள்ள சைவசித்தாந்த நூல்கள், நாயன்மார்கள் சரித்திரம், திருமுறைகள் நீக்கப்பட்டுவிட்டன.

இனி நடைமுறைக்கு வரப்போகின்ற பாடத்திட்டத்தில் சிவனுடைய அவதாரங்கள் என ஒரு பாகம் இருக்கின்றது. சிவனுடைய மூர்த்த பேதங்கள் என்பதற்குப் பதிலாக சிவனுடைய அவதாரங்கள் என்ற பாகம் சேர்க்கப்பட்டிருக்கிறது. சிவபெருமானுக்கு அவதாரமில்லை. அவர் பிறப்பிறப்பில்லாதவர்.

சைவர்கள் உமாதேவியார், விஷ்ணு, கணபதி, முருகன், வைரவர் முதலியமூர்த்திகளைச் சிவனுடைய அருள்வடிவான மூர்த்திகளாகவே வணங்குகின்றார்கள். சிவனுக்கும் இம் மூர்த்திகளுக்கும் பேதமில்லை. இம் மூர்த்திகளின் வழிபாடு சிவனுடைய திருவடியையே சாரும். ஆகையினால் சாக்தம், வைணவம், காணுபத்தியம், கௌமாரம், வைரவம் போன்ற பிறமதங்களைப்பற்றிக் குறிப்பிடல் பிழையாகும். இவையெல்லாம் சைவத்தில் அடங்கும்.

இவ்விதமாகப் பிள்ளைகள் சைவ சமயத்தைப் பிழையாகக் கற்கக்கூடியதாகவும், சைவ சமயத்தில் அவர்களுக்குப் பற்றுக் குறையக் கூடியமுறையாகவும் புதுப் பாடத் திட்ட மமைந்திருக்கின்றது.

சைவசமயத்தை அநுட்டிக்கின்ற பிள்ளைகளுக்கு அக்கொள்கைகளில் பாண்டித்தியமும் பற்றும் உடையவர்களே பாடத்திட்டத்தை வகுத்தல் வேண்டும்.

யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபை 28-3-70 ல் கூடிய நிருவாகசபைக் கூட்டத்தில் குறித்த பாடத்திட்டத்தை சைவ மரபுக்கமையத் திருத்தியமைக்கும் வண்ணம் கல்வியதிகாரிகளைக் கேட்கவேண்டுமெனத் தீர்[illegible]

## வண்ணார்பண்ணைவாழ் மக்களின் சோகம்

### நீராவியடிச் சங்கக் கடை, மனேச்சர் திரு. ஆ. வெற்றிவேலு அவர்களின் மறைவு

"உள்ளத்தாற் பொய்யா
தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்"

என்ற வள்ளுவர் இலக்கணத்திற்கு இலக்கியமாய் அமைந்தவர் வாழ்ந்தவர், மக்கள் உள்ளத்தில் வாழ்கின்றவர், நீராவியடிச் சங்கக் கடை மனேச்சர் என்ற புகழுடம்பைப் பெற்ற, பொன்னுத்துரை என எல்லோராலும் அன்புடன் அழைக்கப்படும் திரு. ஆ. வெற்றிவேலு அவர்கள். மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தியில் பெரியவர் வண்ணைப்பதி மக்களின் அன்புக்குரியவராக, தோழனாக, கைகொடுத்து உதவும் உறவினராக வாழ்ந்தவர் வண்ணார்பண்ணை மக்களுக்கு நீராவியடி ஐக்கிய பண்டகசாலைக்கு, நீராவியடி வாசிகசாலைக்கு, சைவ பரிபாலன சபைக்கு, மற்றும் தர்ம கைங்கரியங்கட்கு இவர் செய்த சேவை சொல்லும் தரமன்று இலைமறை காய்போல் வாழ்ந்த நற்பணியாளர்.

சைவபரிபாலன சபையின் பணிகளுக்கு என்றும் அவர் தம்மாலான உதவிகளைக் கொடுக்கத்தயங்குவதில்லை. சபையாரது சமயப் பிரசார வேலைகளில், அகில இலங்கைச் சைவமகாநாடு நடாத்துவதில், குருபூசைகளைச் சிறப்பாகச் செய்வதில் அவர் காட்டிய ஆர்வமும் ஊக்கமும் சைவ பரிபாலனசபையினது நிருவாக சபையினரால் பல முறை பாராட்டப் பெற்றுள்ளன. நாவலர் ஆச்சிரம மண்டபத்தைப் பராமரிப்பதில் அவர் அதிக அக்கறை கொண்டிருந்தார்.

நீராவியடி வாசிகசாலை சிறந்த முறையில் இயங்க வேண்டும், நீராவிப்பிள்ளையார் கோவில் திருவிழாக்கள் நித்திய நைமித்தியபூசைகள், சிறப்பாக நடைபெற வேண்டும், நீராவியடி மக்கள் சண்டை சச்சரவின்றி ஒரே குடும்பமாக வாழவேண்டும் என்ற பெருவிருப்புக் கொண்டவர்.

இவரிடம் உதவி பெற்றோர் அனேகர். எந்நேரம் புன்சிரிப்பு தவழும் முகத்துடன் தன்னாலான உதவியை மக்களுக்குச் செய்ய இவர் பின் தங்கியது கிடையாது வண்ணைப்பதி மக்களின் உள்ளத்தில் தமது அளப்பரிய சேவையால் நிரந்தரமாக நிலைத்துவிட்டார்.

அண்மையில் பாலைதீவில் நடைபெற்ற படகு விபத்தில் எம்மைப் பிரிந்து சென்றுவிட்டார். ஊரெல்லாம் கூடி ஓக்க அழுதனர் அன்னாரது கடைசி ஊர்வலத்தின்போது அவரது அன்புக்குரியவர்கள் எல்லோரும்

"இருகையு மிரைத்து மோய்த்
தாரின்னுயிர் யார்க்கு
மொன்றயப்
பொருவருந் தேரிற் செல்லப்
புளுத்திடை கண்டார்
போல்வார்"

அவ்வளவு சோகநிலைமை அமைந்தது சென்ற சனி, ஞாயிறு ஆகிய இரு நாட்களும்,

அவர் பிரிவால் வாடும் குடும்பத்தினர், சுற்றத்தினர், நண்பர்கள் அனுதாபிகள் யாவருக்கும் எங்களது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம் எல்லாம் வல்ல இறைவன் திருவடிகளில் அவரது ஆன்மா சாந்தி அடைவதாக.

"தன் கடன் அடியேனையும்
தாங்குதல்
என்கடன் பணி செய்து
கிடப்பதே"

— அபிமான நிருபர். வை. இரகுநாத முதலியார்


## அடைவு நகை ஏலவிற்பனவு விளம்பரம்

அரசாங்க உத்தரவுடன் சக்கலாவோடை, காரைநகர் கிழக்கில அடைவு பிடிக்கும் குமாரவேலு கந்தசாமி அவர்களின் அடைவு கடையில் 1967ம் ஞு ஆனிமீ 1ம் திகதி தொடக்கம் 1969-ம் ஞு தைமீ 31-ம் திகதி முடிய அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாதிருக்கும் நகைகள் யாவும் எனலு 1970-ம் ஞு சித்திரை மாதம் 5-ம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் ஷை அடைவு கடையில வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

காரைநகர்; 1970 ஞு பங்குனிமீ 2-ந் திகதி

வை. ஏரம்பமூர்த்தி
ஏலவிற்பனையாளர்
Auctioneer

எம் 444 6, 13-3-70


மானஞ் செய்துள்ளது. அரசாங்கம் இவ் விஷயத்தில் நீதியாக நடந்துகொள்ளுமென எதிர்பார்க்கின்றோம்.

[பழைய இந்துசமயப் பாடத்திட்டமும் புதிய இந்து சமயப் பாடத்திட்டமும் இப்பத்திரிகையில் பிரசுரஞ் செய்யப்பட்டிருக்கின்றன சைவசித்தாந்தத்திற்கு இழைக்கப்பட்ட தீமையை நேயர்கள் அறிந்துகொள்ளலாம்]

## மகோற்சவம்

வண்ணை ஸ்ரீமத் பாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரசுவாமி கோவில் மகோற்சவம் மாசி மீ 21உ (4-3-70) திங்கட்கிழமை ஆரம்பமாகின்றது. பங்குனி 8உ (21-3-70) தீர்த்தோற்சவமும் நிகழும்.

6-3-70 வெள்ளிக்கிழமை மகா சிவராத்திரியை முன்னிட்டு 10, 12, 2, 4 மணிக்கு நாலுயாமமும் அபிஷேகமும், பூஜையும், பஜனையும், சமயச் சொற்பொழிவுகளும் நிகழும்.

## பேராதனைக் குறிஞ்சிக்குமரன்

திருவில்லாத நகராயிருந்த பேராதனையை திருவுடை நகராக்கும் நோக்கத்துடனேயே இந்து மாணவர் சங்கத்தினரால் இந்தக் குறிஞ்சிக் குமரன் கோவில் அமைக்கப்பட்டதென்று கடந்த வெள்ளிக்கிழமை பேராதனைப் பல்கலைக்கழக குறிஞ்சிக்குமரன் கோவிலில் 'எந்த நோக்கத்திற்காக இந்த ஆலயம் அமைக்கப்பட்டது" என்ற தலைப்பில் பேசிய முன்னைநாள் பல்கலைக்கழக இந்துமாணவர் சங்கத் தலைவர் திரு து அப்புலிங்கம் குறிப்பிட்டார். மேலும் சகல மதத்தினருக்கும் பல்கலைக்கழக வளவினுள் வணங்குவதற்கு ஆலயங்கள் இருந்த போதும் இந்து மாணவர்களுக்கு ஒரு ஆலயம் இல்லாதிருந்தது பெருங்குறையாயிருந்தது இதைத் தீர்க்க எடுக்கப்பட்ட முயற்சியின் விளைவே இந்த ஆலயம் எனக் குறிப்பிட்டார்

வெறும் காடாக இருந்த இடத்தை சிரமதானம் மூலம் மாணவர் சீராக்கியதையும், கோயில் கட்டும் முயற்சியில் உதவி நின்ற பல்கலைக் கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள் ஆகியோரின் ஊக்கத்தையும் நிதிதிரட்ட மேற்கொண்ட முயற்சிகளையும், நிதியுதவி செய்த பெருமக்களின் அன்பையும் விரிவாக எடுத்துக் கூறினர். கோவிலுக்கு ஒரு நந்தவனம் அவசியமானது என்பதையும் வற்புறுத்திக் கூறினர். முந்திய சங்கமும் இந்து மாணவர்களும் சிரமதானத்தின் மூலமும் நிதி சேர்ப்பதன் மூலமும் கோவில் அமைப்பதற்கு உதவி செய்தனர் என்றால் இன்றைய மாணவர்களும் சங்கமும் ஒரு நந்தவனத்தை அமைக்க செயற்பட வேண்டுமெனக் கூறி விடைபெற்றார்.

## மலேசியாவில் கதாப்பிரசங்கம்

மலேசிய சைவப் பெருங்குடி மக்களின் அழைப்பை ஏற்று மலேசியா சென்றுள்ள கான "கதாவாரிதி" சிவ. வை. நித்தியானந்த சர்மா அவர்களால் பெட்டாலிங் ஸ்ரீ மகாமாரியம்மன் கோவிலில் கடந்த மாதம் 20-2-70 வெள்ளிக்கிழமை முதல் 28-2-70 சனிக்கிழமைவரை கம்பராமாயண பிரசங்கம் நிகழ்த்தப்பெற்றது. இவர் சிங்கப்பூர் செண்பகவிநாயகர் கோவில் கும்பாபிஷேக வைபவத்திலும் பிரசங்கம் நடத்தி வருகின்றார். இவர் சித்திரைமாத முற்பகுதியில் நாடு திரும்புவார்.

## நாவலர் நல்வாக்கு

பாவத்துக்கு அஞ்சிப்பொருள் சம்பாதித்து, பெரியோர்களுக்கும் வறியவர்களுக்கும் பங்கிட்டு, நீயும் உண்ணு.

# 1971-இல் நடைமுறைக்கு வரப்போகும் இந்து சமயப் பாடத் திட்டம்

## சைவசித்தாந்தப் பகுதி நீக்கப்பட்ட பாடத் திட்டம்

திருத்த இதழ் - இலக்கம் 2. தொடர்பு எண். எஸ். ஜீ. 76

**இலங்கைக் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை பிரமாணங்களும் பாடத்திட்டங்களும்.**

(1971 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வருவது)

1—10—1968 இல் பிரசுரிக்கப்பட்ட மேற்படி "பிரமாணங்களும் பாடத்திட்டங்களும்" என்பதன் 43 ஆம் பக்கத்தில் காணப்படும் இந்துசமயத்திற்குரிய பாடத்திட்டத்தினை நீக்கிவிட்டு, கீழே தரப்பட்டுள்ள திருத்தப்பட்ட பாடத்திட்டத்தினை சேர்த்து விடவும்.

### இந்து சமயம

**வினாப்பத்திரம் 1**

சமய நூல்கள், சமயப்பிரிவுகள், கடவுள் பற்றிய கொள்கைகள

(i) சமய நூல்கள்: வேதங்கள், ஆகமங்கள், சாவிகைகள், புராணங்கள, தந்திரங்கள் திருமுறைகளும் திவ்வியபிரபந்தங்களும் இப்பொது நூல்களின் இயல்பு பற்றி மாணவர்கள் பருமட்டாக அறிந்திருத்தல் வேண்டும்.

(ii) சமயப்பிரிவுகள்:- சைவம்: சமய நூல்களிற் போதிக்கப்பட்டுள்ளவாறு சைவ சமயத்தின் பிரதான கோட்பாடுகள்; பாசுபதத்தினதும் சித்தாந்த சைவத்தினதும் முக்கியமான சிறப்பியல்புகள் சமயாசாரியர்களும் சந்தான குரவர்களும்

(ஆ) வைணவம்: சமய நூல்களிற் போதிக்கப்பட்டுள்ளவாறு வைணவ சமயத்தின் பிரதான கோட்பாடுகள் … இருஷ்ண மதப்பிரிவுகள ஆழ்வார்களும் ஆசாரியர்களும்

(இ) சாக்தம், கௌமாரம், காணபத்யம். இந்த மதப்பிரிவுகள் ஒவ்வொன்றும் சம்பந்தமான கொள்கைகள் பற்றி மாணவர்கள் பருமட்டாக அறிந்திருத்தல் வேண்டும்.

(iii) கடவுள் பற்றிய கொள்கைகள: பிரதான இந்து மதத் தெய்வங்களினுடைய அவதாரங்கள் பற்றிய பின்வரும விவரங்களை அறிந்திருத்தல் வேண்டும்.

சிவன்: பொதுவாகச் சிவனோடு சார்த்திக் கூறப்படும் சிறப்பியல்புகள் பல்வேறு அவதாரங்கள்; தக்ஷிணாமூர்த்தி, நடராசர், வைரவர், காளாந்தகர், காமாரி என்பன போன்ற மிகவும் முக்கியமான அவதாரங்களின் இயல்புகளும் அவை பற்றிய விவரங்களும்.

விஷ்ணு: பொதுவாக விஷ்ணுவோடு சார்த்திக் கூறப்படும் சிறப்பியல்புகள், பத்து அவதாரங்கள், இந்த அவதாரங்கள் ஒவ்வொன்றினதும் சிறப்பியல்புகளும் அது பற்றிய விவரங்களும்.

சக்தி: பொதுவாகச் சக்தியோடு சார்த்திக் கூறப்படும் சிறப்பியல்புகள், சரஸ்வதி, இலக்குமி, துர்க்கை போன்ற முக்கிய அவதாரங்களின் சிறப்பியல்புகளும் அவை சம்பந்தமான விவரங்களும்.

குமரக்கடவுளும் கணபதியும்: கணபதி, குமரன் என்போருடைய பல்வேறு அவதாரங்களினது சிறப்பியல்புகளும் அந்த அவதாரங்கள் சம்பந்தமான விவரங்கள்.

**வினாப்பத்திரம் II**

இந்துமதக் கருத்துக்கள்; கிரியை முறைகள்; ஒழுங்கு முறைகள் ஒழுக்கங்கள், நவீன இந்துமதம்.

(i) இந்துமதக் கருத்துக்கள்: (அ) வேதாந்தம்: வேதாந்த தத்துவம், விசிட்டாத்துவைதம் துவைதம என்பவை சம்பந்தமான பிரதான கொள்கைகளைப் பற்றி மாணவர்கள் பருமட்டாக அறிந்திருத்தல் வேண்டும். (ஆ) சைவசித்தாந்த தத்துவத்தைப் பற்றி மாணவர்கள் அறிந்திருத்தல் வேண்டும். பின்வருவனவற்றைப் பற்றிச் சிறப்பாக அறிந்திருத்தல் அவசியமாகும்: பதி, பசு, பாசம், கடவுளின் திருவருள், குரு, உண்மையுணர்தல், சத்சரிபு, போனர்ப் பேறுகள்; பஞ்சாட்சரங்கள், [ஜீவன்முகதர்கள்.

(ii) கிரியைகள்: நேசத்திலும், ஆலயத்திலும் நடைபெறும் சமயச் சடங்குகளும், கிரியைகளையும் பற்றி நன்கு அறிந்து பழகியிருத்தல்.

ஒழுங்கு முறைகள்: இந்துக்கள் பின்பற்றும் பல்வேறு வழி முறைகள்.

(iii) ஒழுக்கவியல்: கர்மம் பற்றிய விதி, மறுபிறப்பு பற்றிய கொள்கை; கல்லொழுக்கத்தரம, வர்ணாசிரம தர்மங்கள்.

(iv நவீன - இந்துமதம்: இந்துமதத்துடன் ஏனைய மதங்களின் மோதல், இராமகிருஷ்ணர் விவேகானந்தர், மகாத்மா காந்தி ஆகியோர் ஆற்றிய தொண்டுகள்.

இப் பாடத்திற்குரிய வினாப் பத்திரங்கள் தமிழ் மொழியில் மாத்திரம் பெறக்கூடியதாயிருக்கும்.


### அடைவு நகை ஏல விற்பனவு விளம்பரம்

அரசாங்க உத்தரவுடன் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி 225ம- இலக்கக் கடையில் "ஜெயபாலன அண்ட் கோ" என்னும் விலாசத்தில் அடைவு பிடிக்கும் கா. அம்பிகைபாகன் அவர்களின் அடைவு கடையில் 18-5-67 தொடக்கம் 28-2-69 வரைக்கும் அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாதிருக்கும் நகைகள யாவும் என்னால் 1970-ம் ஆடு பங்குனி மீ 28-ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் பத்து மணி தொடக்கம் ஷெ அடைவு கடையிலிருந்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வை ஏரம்பமூர்த்தி
காரைநகர், Auctioneer, ஏல விற்பனையாளர்
1970-ம் ஆடு மாசி மீ 26ம் திகதி (எம். 442, 27, 6-3-70


## சைவசித்தாந்தப் பகுதியுள்ள பாடத்திட்டம்

### கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சைப் பாடத்திட்டம் 1967 ஆம் ஆண்டும் அதன் பின்னரும்.

### இந்து சமயம்

(ஒவ்வொன்றும் 3 மணி நேரங்கொண்ட இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டது)

**வினாப்பத்திரம் 1**

(இவ்வினாப் பத்திரம் 3 பகுதிகளைக் கொண்டது. பரீட்சார்த்திகள் முதலாம் பகுதிக்கும் இரண்டாம் அல்லது மூன்றம பகுதிக்கும் விடையளித்தல் வேண்டும.)

**பகுதி I - பொது**

1. வேதங்கள்-உபநிடதங்கள், ஆகமங்கள்-உப ஆகமங்கள், புராணங்கள்-இதிகாசங்கள், (தற்கால சரித்திர ஆராய்ச்சியாளரின் … கருத்துக்கள்) பாடப் புத்தகம்: வடமொழி இலக்கிய வரலாறு - டாக்டர் கா கைலாசநாதக் குருக்கள்.
2. இந்து தர்மம், குணத்திரயங்கள், சுவதர்மம், பரதர்மம், பாடப்புத்தகம்: பகவத் கீதை (3 ஆம் 14 ஆம் அத்தியாயங்கள்) சேர். பொன் இராமநாதனுடைய விளக்கவுரை.
3. நீதிநூல்: திருக்குறள் - துறவறவியல் (முதல் 5 அத்தியாயங்கள்)

**பகுதி II - சைவ சித்தாந்தம்**

1. தேவாரம்: (அ) சம்பந்தர் - பின்வரும் தொடக்கங்களையுடைய நான்கு பதிகங்கள்: தோடுடைய செவியன, மந்திரமாவது நீறு, வேயுறு தோளி பங்கன், காதலாகி கசிந்து (ஆ) அப்பர் - பின்வரும் தொடக்கங்களையுடைய மூன்று பதிகங்கள்: கூற்றாயினவாறு, சொற்றுணை வேதியன், வேற்றாகி விண்ணாகி. (இ) சுந்தரர் - பின்வரும் தொடக்கங்களையுடைய மூன்று பதிகங்கள்: பித்தா பிறை சூடி, மற்றுப் பற்றெனக், அந்தணாளன்,
2. திருவாசகம் - திருவம்மானை, திருவெம்பாவை,
3. பெரியபுராணம் - அப்பூதியடிகள் புராணம்.

**பகுதி III வைஷ்ணவ சித்தாந்தமும் பிறவும்**

1. திவ்வியப் பிரபந்தம்: பெரியாழ்வார் திருமொழி - 2 ஆம் பத்து - பின்வரும் தொடக்கங்களையுடைய பதிகங்கள்: மெய்ச்சூது, அரவணையாய், பொய்ப்பாடு. 2. ஸ்ரீமத். பாகவதம் - குசேலப் படலம். 3. தாயுமானவர் - பரசிவ வணக்கம் முழுவதும்,

**வினாப்பத்திரம் 2**

[இவ்வினாப்பத்திரம் 3 பகுதிகளைக் கொண்டது. பரீட்சார்த்திகள் முதலாம் பகுதிக்கும் இரண்டாம் அல்லது மூன்றம் பகுதிக்கும் விடையளித்தல் வேண்டும்.]

**பகுதி 1 பொது**

1. சைவம், வைஷ்ணவம், சாக்தம் - தற்கால சமய ஆராய்ச்சியாளரின் கருத்துக்களும், இவை பற்றிய பொது அறிவும்,
2. பல்லவ சோழர் காலங்களில் சைவ வைஷ்ணவ சமய வளர்ச்சிகள்.

**பகுதி II சைவ சித்தாந்தம்**

1. (அ) பதி, பசு, பாசங்கள் (இவற்றுக்கிடையிலுள்ள தொடர்பு விசேடங்கள்) (ஆ) சைவ சாதனைகள்: சந்தான குரவர் வரலாறு.
2. பாடப் புத்தகங்கள்: (அ) திருவருட்பயன் - திரு. சு. சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்கள், (ஆ) முப்பொருள் விளக்கம் -

வளர்ச்சி 1-ஆம் பக்கம்


### கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வட்டுக்கோட்டை கிழக்கு 1. தம்பிப்பிள்ளை மகேந்திரனும் பெண்
2 அன்னபூரணமும் —வழக்காளிகள்
இல M B 9701
எதிராக
வட்டுக்கோட்டை மேற்கு
(இறந்துவிட்டார்) 1. முருகர் பொன்னையா கைம்பெண் விசாலாட்சி 2. ஷெ பொன்னையா கஸ்தூரி, 1-ம் எதிரியின் ஆதனத்துக்கு நியமிக்கப்பட்ட சட்டப் பிரதிநிதி
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 9701-ம் இலகக வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி கீழ்க்காணும் ஒரு துண்டுக்காணி 1970-ம் ஆடு எப்ரில் மீ 12-ம் திகதி (12-4-70) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.


தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 2479-55 மேலும் ரூபா 2000/-க்கு 23-1-1968 தொடக்கம் 10-8-1968 வரை 8வீத வட்டியும் கூடிய தொகைக்கு இறுபடும் வரை 5 வீத வட்டியும் ஆனால் அதில் கொடுபட்ட தொகை ரூபா 1300/- கழிபடவேண்டும் இன்னும் கோட்டுச் செலவு ரூபா 345-30 இதிலும் கொடுபட்ட தொகை ரூபா 310/- கழிபடல் வேண்டும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி வட்டுக்கோட்டை கோவிற்பற்று வட்டுக்கோட்டை மேற்கிறை "நீலபாலன் வட்டி" கி. பர. 4 செய்பயிர் வான் பயிர்களும் வடகிழக்கு மூலையில் இருக்கும் கிணற்றில் அரைவாசியும். இதற்கெல்லை கிழக்கும் மேற்கும் கையொழுங்கை. வடக்கு முருகர் பொன்னையாவின் உரிமைக்காரரினுதனம் தெற்கு ஒழுங்கை இதடக்கலில் எதிரிகளுக்குரிய 4/14 பங்கும் அதற்குரியவைகளும்.

S இரத்தினசபாபதி, J. P
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
ஸ்ரேசன் றோட்,
சோண்டாவில், 26-2-70
எம். 446. 6-3-70


### "விழிப்பாயிருக்க வேண்டிய காலம்!



**பக்தர்;** "இந்து சமயப் பாடத் திட்டத்தில் சைவசித்தாந்தப் பகுதியை நீக்கியுள்ளார்களாமே! இது முறையாகுமா...? சைவப் பெரியார் திரு. சு. சிவபாதசுந்தரம்பிள்ளை, ஸ்ரீ கணேசையா போன்றோர் இன்றிருந்தால் இந்த அநீதியை ஏற்பார்களா?"

**சித்தர்:** "அந்த மகான்கள், இங்கு இன்றிருந்து நாட்டு நடவடிக்கைகளையும், மக்கள் வாழ்க்கையின் போக்கையும் அவதானித்தால், எங்கள் ஞானப்பிரகாச முனிவரைப்போல் நாட்டைவிட்டு வெளியேறி விடுவினம் பாருங்கோ; சைவசமயப்பிள்ளைகளின் கல்விபற்றி சைவப்பெற்றோர்கள் விழிப்பாயிருக்கவேண்டும்"!

"நாயன்மார்-நாதன்"


### கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வழ. இல: M B. 10775

யாழ்ப்பாணம் 50-ம் நம்பர் பருத்தித்துறை வீதி, தம்பையா முத்தையா —வழக்காளி

எதிராக

புங்குடுதீவு 4-ம் வட்டாரம் மாரிமுத்து சின்னத்தம்பி கைம்பெண் நாகம்மா

—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 10775-ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1970-ஆம் ஆடு சித்திரை மாதம் 8-ஆம் திகதி (8-4-70) புதன்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: — முதல் வட்டி ரூபா 2400.00. இதில் ரூபா 1200/- க்கும் 25.4-69 தொடக்கம் 26-9 69 வரைக்கும் 100க்கு 12 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 253 / 72 + 69/82+65/12 = ரூபாய் 388/66 சதம்.

காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் தீவுப்பகுதி புங்குடுதீவுக் கோயிற்பற்று புங்குடுதீவு மேற்கிறை "Noonukanuku Kilakku" நுனுக்கனுக்கு கிழக்கு" பா நி. இலா 8 எட்டும் கிணறும் செய்பயிர் வான் பயிர்களும். எல்லை கிழக்கு வீரபாகு பெண் சின்னம்மாவினுதனம். வடக்கு ஆறுமுகம் பெண் நாகம்மாவினுதனம். மேற்கு நாகனுதர் முத்துவேலுவினுதனம். தெற்கு V. சுப்பையாவினதும் பங்காளருக்குமுரிய ஆதனம் இடங்களும்.

க. சுப்பிரமணியம்
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
24-ஆம் நம்பர்
1-ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம், 1-2-70
எம். 447 6-3-70

### நாவலர் நல்வாக்கு

தரித்திரனாய் இருக்கும் போது திருத்தி அடையாதவன், செல்வனாய போதும், திருத்தியடையான்; திருத்தியடையாமை மனக் குற்றமே அன்றிப் பொருட் குற்றம் அன்று. ——

சிவமயம்

# திருச்செந்தூர்ப் புராணம்

முருகப்பெருமானுடைய புகழை விளக்கும் இந் நூல் யாவரும் படிக்க வேண்டிய ஒன்றாகும்.

யாழ்ப்பாணம்

சைவபரிபாலனசபை வெளியீடு

பிரதி விலை ரூபா 10-00

பெறுமிடம்:
சைவப்பிரகாச அச்சியந்திரசாலை
450, காங்கேசன் துறை வீதி,
யாழ்ப்பாணம்.

### அன்பளிப்புகள்

திருக்கேதீச்சரம் சிவராத்திரி விழால் யாழ்ப்பாணம் மில்க் வைற் சோப் ஸ்தாபனத்தினர் பல இலவச வெளியீடுகளை வழங்க முன்வந்துள்ளனர்.

### இன்று பெரியபுராண விரிவுரை

சிவதொண்டன் நிலயத்தாரின் ஆதரவில் வண்ணை வைத்தீசுவரன் கோயிலில் வெள்ளிதோறும் "சிவதொண்டன்" ஆசிரியரால் மாலை 6 மணி — 7 மணி வரை பெரியபுராண விரிவுரை நடாத்தப்பெற்று வருகிறது. (ந வி,)

### 42 வருடகாலம் ஆசிரியராகப் பணி

( 1-ம் பக்கத்து வளர்ச்சி )

வர். ஆசிரியர் சங்கம், சமூக முன்னேற்றச் சங்கம், கூட்டுறவுச் சங்கம் முதலியவற்றில் முக்கிய அங்கத்தவராகக் கடமையாற்றினார். இவ்வாறாகப் பல துறைகளிலும் தொண்டாற்றிய ஆசிரியர் அவர்கள் இளைப்பாறிய பின்னும் மக்கள் சேவைக்குத் தனது காலத்தை செலவுசெய்வாரென எதிர்பார்க்கின்றோம்.

——


### இந்துசாதனம்

திருத்திய வருடசந்தாவிகிதம்

உள்நாடு

| | |
|---|---|
| ஆங்கிலம் | 10-00 |
| தமிழ் | 10-00 |
| ஆங்கிலம் - தமிழ் | 15-00 |

வெளிநாடு

| | |
|---|---|
| ஆங்கிலம் | 12-00 |
| தமிழ் | 12-00 |
| ஆங்கிலம் - தமிழ் | 18-00 |


### பாலைதீவு படகு விபத்தில் உயிர்நீத்த குடும்பம்

பாலதீவு விபத்தில் உயிர் நீத்த 8 பேர்கள் இவர்கள். மன்னார் மாரிமுத்துச் செட்டியாரின் மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகளாவர். இறந்தவர்களின் விபம்: மாரிமுத்து மகேஸ்வரி (மனைவி) நாகேஸ்வரி (மகள்), ஐயம்பெருமாள் (மகன்) நாகேந்திரராசா (மகன்) ஜெகதீஸ்வரி (மகள்) K. தேவராசன் (பேரன்) K. சாந்தினி (பேத்தி) K. சுமதி (பேத்தி மீட்கப்படாதவர்: M. மகேஸ்வரி M. நாகேத்திரராசா (மகன்)


## கோட்டு விற்பனவு விளம்பரம்

சங்கானை மேற்கு (1) சின்னத்தம்பி தனபாலசிங்கம்
வழ. இல. M. B. 10113 எதிராக வழக்காளி
பண்டத்தரிப்பு (1) கார்த்திகேசு சண்முகம்
(2) பெண் இராசம்மா —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 10113ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1970-ம் ஆல் பங்குனி மீ 28-ம் திகதி (28—3—70) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- ரூபா 1766—00 இதில் ரூபா 1000-00க்கு 27—6—68 திகதி தொடக்கம் 8—11—68 திகதி வரைக்கும் 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகை இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 315—55

ஆதன விபரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு பகுதி பண்டத்தரிப்பு கோவிற்பற்று பண்டத்தரிப்பு இறை கிழவி கலட்டி நிலப்பரப்பு 5ம, குழி 16ம, வான்பயிர்களும செய்பயிர்களும், கிழக்கு எல்லையிலுருக்கும் கிணற்றில் பங்கும் வீடும், எல்லை கிழக்கு இந்த காணிக்கு போகும் ஒழுங்கை முகப்பும், கணபதி கந்தையாவின் ஆதனமும். வடக்கு சுப்பர் நாகமுத்துவின் பிள்ளைகளுக்குரிய ஆதனம், மேற்கு சூசைப்பிள்ளை அந்தோனிப பிள்ளைக்குரிய ஆதனமும், தம்பியாருக்குரிய ஆதனமும், சூசைப்பிள்ளை பெண் அன்னம்மாவுக்குமுரிய ஆதனமும், தெற்கு ஆறுமுகம் பெண் இராசம்மாவுக்கும் வயித்திலிங்கம் பெண் பார்பதிக்குமுரிய ஆதனம். இதடங்கலில் மேற்கு எல்லைக் காணிக்கு போகவேண்டிய கிணற்றில் பங்கும் தூர்வைவழி வாய்க்காலும் போக மிகுதி அடங்கலும் விற்கப்படும.

ந. ஆறுமுகம்,
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்

சித்தன்கேணி,
23-2-70. எம். 445, 6-3-70



## கோட்டுக்கொமிஷன் விற்பனவுவிளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் வழ, இல. 8912

1. ஜேம்ஸ் ஜெயராசாவும் 2. பெண் லில்லி ஜெயராசாவும் கரவெட்டி மேற்கு, கரவெட்டி. - வழக்காளிகள்

1. செல்லமுத்து மகாலிங்கம் 2. பெண் சிவபாக்கியமும், புலோலி கிழக்கு, பருத்தித்துறை —எதிராளிகள்

மேற்குறித்த இலக்க வழக்கின் தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனத்தை 1970ம் ஆண்டு சித்திரை (ஏப்றில்) மாதம் 11-ம் திகதி (11-4-1970) சனிக்கிழமை காலை 10 மணிதொடக்கம் குறித்த ஆதனத்திடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும். இக்காணியும் வீடும், தட்டாதெருவில் பருத்தித்துறை நகரசபை எல்லைக்குள் உள்ளது. விலை மதிப்பு ரூபா 11000/-

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி பருத்தித்துறை கோவிற்பற்று புலோலி கிழக்கு வெண்றிபாகு தேவண குறிச்சி "குருமணல்" நி. பர, 1, குழி 11, 2/3ம் அடங்கிய வீடும் - உலாந்தா மேஸ்தர் M. வேலுப்பிள்ளை என்பவரால் 1939ம் ஆண்டு பெப்ரவரி (மாசி) மாதம் 20-ம் திகதி 438-ம் இலக்கத்தில் விஸ்தரிக்கப்பட்டதுமான படத்தில் கண்டிருக்கும் 1ம் நம்பர் துண்டுக்கு எல்லை கிழக்கும் வடக்கும் வெஸ்லியன் மிஷனுக்குரிய ஆதனம், மேற்கு வேலுப்பிள்ளை கைம்பெண் சின்னம்மாவுக்கும மறுபேருக்குமுடைய ஆதனம், தெற்கு ஒழுங்கை. இவ்வெல்லைகளுக்குட்பட்ட நிலம், கொட்டில் கல் வீடும் அடங்கலும்.

| | | |
|---|---|---|
| தீர்வைத்தொகை: — | ரூபா | 9835-00 |
| வட்டி ரூபா 7000/-க்கு 9 வீத வட்டி 24-11-65 தொடக்கம் 13-6-1966 வரை | ,, | 350-00 |
| வட்டி ரூபா 10185/-க்கு 14-6-1966 தொடக்கம் 5 வீத வட்டி 11-4-1970 வரை — | ,, | 1951-00 |
| மொத்தம் | ,, | 12136-00 |
| கொடுபட்ட பணம் | ,, | 5000-00 |
| ஆகவே அறவிடவேண்டிய பணம் | ,, | 7136-00 |

க. நா. சுப்பிரமணியம்
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்

புலோலி மேற்கு,
பருத்தித்துறை. 1-3-70 எம். 443 6-3-70



## அடைவு நகை ஏலவிற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் 68 கன்னாதிட்டி றோட் திரு. K. C. நடராசா அவர்களிடம் 1969-ம் ஆல ஜனவரி (தை) மீ 1-ம் உ (1-1-69) திகதிக்கு முன் வைத்த அடைவு நகைகளில் மீட்கப்படாதவை 1970-ஆம் ஆ மார்ச்சு (பங்குனி) மீ 18 உ (18-3-70) புதன்கிழமை முற்பகல் ஒன்பது மணி தொடக்கம் மேற்படி அடைவு கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் விறகப்படுமே.

வி. செ. குட்டிப்பிள்ளை
ஏலவிற்பனவாளரும் கோட்
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்

"இராசகிரி"
643, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். எம். 435 27, 6—3 70



## அடைவு நகை ஏல விற்பனவு விளம்பரம்

அரசாங்க உத்தரவுடன் யாப்பாணவூரி காரைநகரில் அடைவு பிடிக்கும் வேலுப்பிள்ளை சண்முகநாதன் அவர்களின் அடைவு கடையில் 1968-ம் ஆ ஆவணி மீ 1-ஆம் திகதி தொடக்கம 1968-ஆம் ஆல மார்கழி மீ 31-ஆம் திகதி முடிய அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாதிருக்கும் நகைகள் யாவும் என்னால் 1970-ஆம் ஆல பங்குனி மீ 19-ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் பத்து மணி தொடக்கம் ஷெ அடைவு கடையில் வைத்துப் பிரசித்த ஏலத்தில் விறகப்படும்.

வை. ஏரம்பமூர்த்தி
Auctioneer
ஏல விற்பனையாளர்.

காரைநகர், 1970-ம் ஆ மாசி மீ 20-ம் திகதி
எம் 430 27-2, 6-3-70



## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

யாழ்ப்பாணம், அச்செழு 1. இளையதம்பி செல்லையாவும் மனைவி
2. அன்னபூரணமும்
இல: M B 9066 எதிராக —வழக்காளிகள்
யாழ்ப்பாணம், அச்செழு 1. கந்தையா சரவணமுத்துவும்
2 மனைவி தனக்காகவும், காலஞ்சென்ற பாறுபதப்பிள்ளையின் சட்டப்படி பிரதிநிதியுமான நாச்சுப்பிள்ளை — எதிராளிகள்

M B 9066 இலக்க வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ்க்காணும் ஆதனங்கள் 1970-ம் ஏப்பிரல் [சித்திரை] மீ 10-ஆம் திகதி (10-4-70) வெள்ளிக்கிழமை முற்பகல் பத்து மணி தொடக்கம் வரிசைக் கிரமமமாக அவ்வவ்வாதனத்துள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 2868/- மேலும் 1800/- ரூபாவுக்கு 5 5—67 தொடக்கம் 23 3—68 வரைக்கும் வருடமொன்றுக்கு 8 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரைக்கும் வருடமொன்றுக்கு 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 464-85 சதம பவுண்டேச் மற்றும் விற்பனவுக்குரிய சலார்களும். இதில் எதிரியால் கட்டப்பெற்ற ரூபா 750/- குறைய

ஆதனங்களின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி புத்தூர் கோவிற்பற்று அச்செழு இறை 'காவடி ஒல்லை' நிலப்பரப்பு 7½ செய்பயிர் வான் பயிர்களும இதற்கு எல்லை கிழக்கு - இளையதம்பி மனைவி சின்னாச்சிப்பிள்ளையின உரிமைக்காரர்களினுதனம், வடக்கு - சின்னத்தம்பி சன்னையாவுக்கும், மற்றவர்களுக்குமுரிய ஆதனம். மேற்கு - இராமுப்பிள்ளை மனைவி ஆச்சிமுததுவினுதனம, தெற்கு - சரவணமுத்து மனைவி தங்கம்மாவுக்கும் மற்றவர்களுக்குமுரிய ஆதனம. இதில சொரியலாய் மூன்றிலொரு (1/3) பங்கு. பதிவு K. 143-16

2. ஷெ அச்செழு இறை "பூலாசிட்டி" நிலப்பரப்பு 9½ பனைகளும் இதற்கு எல்லை கிழக்கு - வைத்தி மனைவி அன்னப்பிள்ளையினுதனம். வடக்கு - பூததம்பி சின்னையாவுக்கும் பங்காளர்களுக்குமுரிய ஆதனம். மேற்கு - ஆறுப்பிள்ளை மனைவி முத்துப்பிள்ளையினுதனம். தெற்கு - வாரித்தமபி மனைவி சிவகாமிப்பிள்ளைக்கும் மற்றவர்களுக்குமுரிய ஆதனம. இதில சொரியலாக மூன்றிலொரு (1/3) பங்கு பதிவு K 143-17

3 ஷெ அச்செழு இறை "பெரியபுலம" நிலப்பரப்பு 24 செய்பயிர் வான்பயிர்களும் பனைகளும் வீடுகளும் இவ்வாதனத்துக்கு வடகிழக்குப் பக்கத்திலுள்ள கிணற்றில தண்ணீர் பங்கும் வழிவாய்க்கால் இதற்கு எல்லை கிழக்கு - செல்லையா மனைவி தங்கம்மாவினுதனம. வடக்கு - இராமலிங்கம் சரவணமுதது மனைவி அன்னப்பிள்ளையினுதனம். மேற்கு - இராமுபபிள்ளை அம்பலவாணரினுதனம். தெற்கு - நல்லதம்பி மனைவி செலலாச்சிடபிள்ளையினுதனம். இதில் சொரியலாய் பதினாறில் ஒன்பது (9/16) பங்கு. பதிவு K 178-60

4. ஷெ இறை 'பெரியபுலம்' நிலப்பரப்பு 10 குளிகள் 7½ வீடுகளும் பனைகளும் இதற்கு எல்லை கிழக்கு - செல்லையா மனைவி தங்கம்மாவுககும் பங்காளர்களுக்குமுரிய ஆதனம். வடக்கு சின்னத்தம்பி மனைவி சிதமபரத்துக்கும் மற்றவர்களுக்குமுரிய ஆதனம், மேற்கும் தெற்கும - நல்லதம்பி மனைவி செல்லாச்சிக்கும் பங்காளர்களுக்குமுரிய ஆதனம். இதில சொரியலாய் நிலப்பரப்பு 1 குளிகள் 4, 9/16 பதிவு K. 179/-61

5. ஷெ இறை "கொக்கன்புலம்" நிலப்பரப்பு 1½ இவ்வாதனத்தின் மேற்குப் பக்கத்திலுள்ள கிணற்றில் பங்கு வழிவாய்க்கால் இதற்கு எல்லை கிழக்கு சரவணமுத்து மனைவி அன்னப்பிள்ளைக்கும் பங்காளர்களுககுமுரிய ஆதனம். வடக்கு இளையதம்பி மனைவி சின்னாச்சிப்பிள்ளையின் உரிமைக்காரர்களினுதனமும் மற்றுமாதனங்களும், மேற்கு அப்பாக்குட்டி மனைவி நன்னிப்பிள்ளையின் உரிமைக்காரர்களினுதனம். தெற்கு கீழே விபரிக்கப்பட்டிருக்கும் 6-ம்ஆதனம். இதுமுழுவதும். பதிவு K 143-15.

6. ஷெ இறை "கொக்கன்புலம்" நிலப்பரப்பு 3. இவ்வாதனத்தின் மேற்கு பக்கத்திலுள்ள கிணற்றில் பங்கு, வழிவாய்க்கால் இதற்கெல்லை கிழக்கு சரவணமுத்து கைம்பெண் அன்னப்பிள்ளைக்கும பங்காளர்களுக்குமுரிய ஆதனம், வடக்கு - மேலே விபரிக்கப்பட்ட 5ம் ஆதனம, மேற்கு - செல்லையா மனைவி சின்னம்மாவுக்கும் பங்காளர்களுக்குமுரிய ஆதனம், தெற்கு - ஒழுங்கை இது முழுவதும் பதிவு K. 91-110

7 ஷெ இறை "பெரியபுலம்" நிலப்பரப்பு 5, குளிகள் 1½ பனைகளும் இதற்கு எல்லை கிழக்கு - செல்லையா மனைவி தங்கம்மாவுககும் மற்றவர்களுக்குமுரிய ஆதனம், வடக்கு - சின்னத்தமபி மனைவி சிதம்பரத்துக்கும் பங்காளர்களுக்குமுரியஆதனம். மேற்கும் தெற்கும் - சரவணமுத்து கைம்பெண அன்னப்பிள்ளைக்கும், நல்லதம்பி மனைவி செலலாச்சிக்குமுரிய ஆதனங்கள். கிணற்றுப் பங்குடன் இவ்வாதனத்தில் சொரியலாய் பதினாறில் மூன்று (3/16) பங்கு. பதிவு K. 216/264

வி. செ, குட்டிப்பிள்ளை,
ஏலவிற்பனவாளரும் கோட்கொமிஷனரும்
Commissioner Sales & Valuer,

"இராச கிரி"
643, காங்கேசன்துறைவீதி,
யாழ்ப்பாணம். எம் 431 6-3-70


வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்


யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 27—2—1970 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர் திரு. மு. மயில்வாகனம் அவர்கள்